நமண்டி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: V. குணபூஷனம்

நாள்: 13.01.2024

பொருள்: மனைப்பிரிவு – மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மற்றும் வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் நமண்டி ஊராட்சி வடமாவந்தல் கிராமம் சர்வே எண்: 5/2A2 ல் AAVARANAA MEGA TOWN - II ஏக்கர் 9.06 ல் குடியிருப்பு மனைப்பரிவிற்கு அனுமதி தொடர்பாக. மனை எண்கள் 1 முதல் 221 வரை மனைகள் விற்பனை செய்த ஒப்புதல் அளித்தல் சார்பு.

பார்வை:
1. உதவி இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை அவர்களின் கடிதம் ந.க D3C1DGTK/2023/ TCP திருவண்ணாமலை நாள்: 28.11.2023
2. உதவி இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம் திருவண்ணாமலை அவர்களின் கடிதம் ம.வ./மா.ந.ஊ.உ.இ.எண்: 276/2023 திருவண்ணாமலை நாள்: 28.11.2023
3. அரசாணை (நிலை) எண்: 79/வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நாள்: 04.05.2017
4. அரசானை எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3) துறை நாள். 9.12.2020
5. நமண்டி ஊராட்சி மன்றத் தீர்மான எண்: 80 நாள்: 12.01.2024

உத்தரவு:

பார்வை 01-ல் காணும் திருவண்ணாமலை உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் கடிதத்தில் நமண்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வடமாவந்தல் ஊராட்சி/ கிராமம் சர்வே எண்கள்: 5/2A2 -ல் 9.06 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பெற்றுள்ள புதிய AAVARANAA MEGA TOWN-II குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப இசைவு தெரிவித்து ஆணை வரப்பெற்றுள்ளது.

அங்கீகரிகப்பட்ட மனைப்பிரிவுகள் ஒதுக்கீடு விபரம்:

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	=	9.06 ஏக்கர்
கோரிய மனைகள்	=	224
ஒதுக்கிய மனைகள்	=	221

மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகளின் பரப்பு= 9209.18 சதுர மீட்டர்

பார்வை 02-ல் காணும் அரசாணை (நிலை) எண்: 79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நு.வ.4(3))த் துறை நாள்: 04.05.2017 குறிப்பிட்டுள்ள உட்பிரிவு 09-ன்படி நகர ஊரமைப்பு இயக்குநரிடமிருந்து செய்யக் கருதியுள்ள மேம்பாடு குறித்து முன் அனுமதி பெறப்பட்டவுடன் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47-ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து, அதனை வசூலித்து அரசுக் கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைத்து செய்யக் கருதியுள்ள மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ள உரிய அனுமதி அளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 03-ல் காணும் கடிதம் வாயிலாக ஆரணி சார்பதிவாளர் அலுவலகம் அலுவலகம் அவர்களிடம் நமண்டி ஊராட்சி / கிராமம் சர்வே எண்: 5/2A2 -ல் 9.06 ஏக்கரில் AAVARANAA MEGA TOWN -II புதிய மனைப்பிரிவு அமைந்துள்ள இடத்தின் மதிப்பீடு கோரப்பட்டது.

பார்வை 03-ல் காணும் கடிதத்தின் வாயிலாக ஆரணி சார்பதிவாளர் அலுவலகம் அவர்கள் கீழ்க்கண்டவாறு மதிப்பீடு அளித்துள்ளார்.

வ.எண்	சர்வே எண்	பரப்பு	தன்மை	மதிப்பீடு		குறிப்பு
				ஏக்கர்	ஹெக்டேர்	
1	சர்வே எண் 5/2A2 -ல் AAVARANAA MEGA TOWN -II 9.06 ஏக்கர்		Dry Maanavari Land Type-III	9.06 (394654) சதுர அடி	8400 1 ஹெக்டேர்	பதிவு அடிப்படையில் உயர் மதிப்பீடு

எனவே நமண்டி ஊராட்சி /வடமாவந்தல் கிராமம் சர்வே எண்: 5/2A2 -ல் 9.06 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். இதனில் 1 முதல் 221 மனைகள் அமைந்துள்ள இடத்தின் பரப்பு 9.06 ஏக்கர் வெம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகம் அவர்களின் கடிதத்தின் மொத்த மதிப்பீடு (ரூ.45,60,000/-) ஆகும்.

எனவே மனுதாரர் மேற்கண்ட இடத்திற்கு 3 சதவீதம் தொகை ரூ.1,39,000/- ஆக அரசு தலைப்பில் (A/C:7391583880) இந்தியன் வங்கி கிளை வெம்பாக்கம், நாள்: 28.12.2023 மற்றும் Scrutiny Fee Rs. 1000x221=221000/- ஊராட்சி நிதி கணக்கு எண்-1 நாள்: 28.12.2023-ல் செலுத்தி அதற்கான இரசீதுகள் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து, பார்வை 4-ல் குறிப்பிட்டுள்ள வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் நமண்டி ஊராட்சி மன்றம், வடமாவந்தல் கிராம தீர்மானத்தின் படி AAVARANAA MEGA TOWN -II மனைவிரிவில் உள்ள கீழ்க்கண்ட மனைகளை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விற்பனை செய்யப்படாத எண்கள் விவரம்:
1-221
(மொத்த பரப்பு: 9.06 ஏக்கர்)

V. ரவிபுஷ்பம்
தலைவர்
ஊராட்சி மன்றத்தலைவர்
நமண்டி ஊராட்சி
வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்:
திரு. T. கார்த்தி,
நெ.234, புதுத் தெரு,
அசனமாபேட்டை கிராமம்,
வெம்பாக்கம் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

நகல் பணிவு. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திருவண்ணாமலை
நகல் பணிவு. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை
நகல். வெம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகம்
நகல். வட்டார வளர்ச்சி அலுவலர், வெம்பாக்கம்.
நகல். ஊராட்சி செயலர், நமண்டி.